# சின்னதம்பி பெரியதம்பி



**சின்னதம்பி :** ஏண்ணே; தேர்தல் ஆணையத்தின் அந்தஸ்தை குறைக்கக் கூடாது என்று முன்னாள் தேர்தல் தலைமை ஆணையர்கள், பிரதமருக்குக் கடிதம் எழுதியிருக்கிறார்களாமே?

**பெரியதம்பி :** **ஆமாம் தம்பி; கடிதம் எழுதினாலும், முறையிட்டாலும், போராடினாலும், பிரதமர் மோடி கவலைப்படவா போகிறார்? அலட்சியத்தின் உச்சத்தில் இருப்பதால், எதிர்க் கருத்துகள், இடித்துரைகள் எதுவும், பிரதமரின் மனதிலோ, செவியிலோ ஏறாது !**

**ஒன்றிய பா.ஜ.க. ஆட்சியில், குடியரசுத் தலைவரின் அந்தஸ்தையே மதிப்பதில்லை; இந்த நிலையில், தேர்தல் ஆணைய அந்தஸ்தைப் பற்றிப் பேசுவதால் என்ன பயன்?**

சட்டத் தொழிலின் அடிப்படையான

# வழக்கறிஞர்களின் நேர்மையை பொறுத்தே தொழில் செழிக்கும்!

## தலைமை நீதிபதி சந்திரசூட் பேச்சு!

சத்ரபதி சம்பாஜிநகர், செப். 20-

மும்பையில் நடந்த நிகழ்ச்சியில் உச்சநீதி மன்ற தலைமை நீதிபதி டிஒய். சந்திரசூட் பங்கேற்று பேசியதாவது:-

வழக்கறிஞர் நேர்மையாக நடந்து கொண்டால் தொழில் தொடர்ந்து செழிக்கும். வழக்கறிஞர்கள் நேர்மை, தர்மத்தை கடைப்பிடிக்காவிட்டால் சட்டத் தொழில் தானாக அழிந்துவிடும். வழக்கறிஞர்களால் உலகம் முழுவதையும் முட்டாளாக்க முடியும். ஆனால் அவர்களது மனசாட்சியை முட்டாளாக்க முடியாது. அது ஒவ்வொரு இரவும் அவர்களைக் கேள்வி கேட்டுக்கொண்டே இருக்கும்.



நேர்மையே சட்டத் தொழிலின் அடிப்படையாக உள்ளது. வழக்கறிஞர்கள் தொடர்ந்து நேர்மையுடன் வாழ்வோம். நீதிபதிகளை மதிக்கும் போது வழக்கறிஞர்களுக்கு மரியாதையும், வழக்கறிஞர்களை மதிக்கும் போது நீதிபதிகளுக்கு மரியாதையும் கிடைக்கும். இருவரும் நீதி சக்கரத்தின் ஒரு பகுதி என்பதை உணரும் போது தான் இந்த பரஸ்பர மரியாதை ஏற்படுகிறது.சட்ட அமைப்பில் பெண்களுக்கு பொருத்தமான குரல் கொடுப்பதை உறுதி செய்வது நீதிபதிகள் மற்றும் வழக்கறிஞர்களின் பொறுப்பாகும்.

இவ்வாறு அவர் கூறினார்.

கலைஞர் மகளிர் உரிமைத் தொகை

# விளிம்பு நிலைப் பெண்களின் கைவிளக்கு!



உடோப்பியா (Utopia) எனும் ஆங்கில சொல்லுக்கு அனைத்து வசதிகளும் கொண்ட, துன்பங்களே இல்லாத கற்பனையான உலகம் என்று அர்த்தம். அப்படி ஒன்று சாத்தியமே இல்லை என்பதால் பொதுவாக நடக்கவே முடியாத நம்பிக்கைகளை Utopian என்று குறிப்பிடுவார்கள்.

ஆனால் அப்படிப்பட்ட கற்பனைகள் சாத்தியம்தான் என்று வாதிடுகிறார் டச்சு வரலாற்று அறிஞர் ரட்கர் பெர்க்மேன். அவரது Utopia for Realists எனும் புத்தகத்தில் தனது வாதங்களை அறிவியல்பூர்வ ஆதாரங்களுடன் முன்வைக்கிறார்.

அதற்கு அவர் சொல்லும் காரணிகளில் முக்கியமானது: இரண்டு நூற்றாண்டுகளுக்கு முன்பு வரை நடக்கவே நடக்காது இதெல்லாம் உடோப்பியா என்று ஒதுக்கப்பட்ட பல விஷயங்கள் இன்று நம்மிடையே சகஜமாக புழக்கத்தில் உள்ளன என்று சொல்கிறார்.

அவற்றில் சில:

**பென்ஷன்**
**பெண் கல்வி**
**மண முறிவு**
**இலவச மருத்துவம்**
**வார விடுமுறை**

என்று பட்டியல் போகிறது. ஏன், ஜனநாயகம் கூட மானுடப் பிரச்சினைகளுக்குத் தீர்வாக 17ம் நூற்றாண்டில் முன்வைக்கப்பட்ட போது 'இதெல்லாம் நடைமுறையில் வேலைக்காகாது பாஸ்!' என்று ஒதுக்கித் தள்ளி இருக்கிறார்கள். என்று மேற்கோள்கள் காட்டுகிறார்.

ஆனால் இன்றைக்கு ஜனநாயகம் இல்லாத நாடுகள்தான் அதிசயமாகவும் விதிவிலக்குகளாகவும் பார்க்கப்படுகிறது.

அதே போல இன்றைக்கு நடைமுறைக்கு ஒவ்வாதவை என்று பார்க்கப்படும் பல விஷயங்கள் வருங்காலத்தில் சாத்தியப்படப் போகிறது என்கிறார் அவர். அந்தப் பட்டியலில் அவர் குறிப்பிடும் முக்கிய விஷயம் Universal Basic Income. அதாவது அனைவருக்கும் குறைந்தபட்ச வருமான உத்திரவாதம்.

இதைச் சொல்லும் போதே பலரும் கசப்புடன் அதனை அணுகுகிறார்கள். ஆனால் அதுதான் நாளை நிதர்சனமாகப் போகிறது என்று உற்சாகத்துடன் பேசுகிறார். அதற்கான முனைப்புகளை பல்வேறு உலக நாடுகள் முன்னெடுத்திருக்கின்றன. இந்த குறைந்தபட்ச வருமான உத்திரவாதம் குறுகிய அளவில் அமல்படுத்தப்பட்ட நாடுகளில் விரைவான வறுமை ஒழிப்புக்கு வழி வகுத்திருக்கிறது, அச்சமூகங்களில் கல்வி மற்றும் பொருளாதார வளர்ச்சிக்கு உதவி இருக்கிறது என்பதற்கான ஆதாரங்களை அடுக்குகிறார்.

பல்வேறு விஷயங்களில் முன்னுதாரணமாக இருக்கும் தமிழ்நாடும் இப்படிப்பட்ட முனைப்புகளை எடுத்திருப்பது இந்திய அதிசயங்களில் ஒன்று. மகளிர் உரிமைத் தொகை அந்த முனைப்புகளில் ஒன்று. ரேஷன் அரிசி ரூபாய்க்கு மூன்று படி வழங்கப்படும் என்று ஆரம்பித்த கனவு, வளர்ந்து வளர்ந்து இன்று இலவசமாகவே 20 கிலோ வழங்கும் நிலைக்கு முன்னேறி இருக்கிறது.

**நடைமுறை சாத்தியமே இல்லை எனும் கனவுகளை நிறைவேற்றியே தீருவேன் எனும் பிடிவாதத் தலைவர்கள்தான் சமூக மாற்றத்துக்கு வித்திடுகிறார்கள். அந்த நோக்கில் பெண்களுக்கு உரிமைத் தொகை என்று வழங்கும் திட்டம் முக்கியமானது என்று கருதுகிறேன்.**

விளிம்பு நிலையில் வாழும் லட்சக்கணக்கான குடும்பங்கள் இதனால் பயன் பெறப் போகிறார்கள். ரேஷன், சத்துணவு என்று பல்வேறு திட்டங்களும் சிறிது சிறிதாக துவங்கி இன்று முழுக்கவும் வியாபித்தது. இந்தத் திட்டமும் கொஞ்சம் கொஞ்சமாக விரிவுபடுத்தப்படும் என்று எதிர்பார்க்கிறேன்.

**ஒரு ஸ்வீகி ஆர்டருக்கே ஆயிரம் ரூபாய் செலவிடும் குடும்பங்களுக்கு இத்திட்டத்தின் வீரியம் புரிய வாய்ப்பில்லை. ஆனால் இரண்டாயிரம் ரூபாய்க்கு முறைவாசல் செய்யும் பெண்களுக்கு இது கண்டிப்பாக புரியும்.**

**பெண்களின் முன்னேற்றத்தில் பல்வேறு சாதனைகளைப் புரிந்து தேசத்துக்கே முன்னுதாரணமாக விளங்கும் மாநிலம் தமிழ்நாடு. அந்த வழியில் அடுத்த மைல்கல்தான் இந்த உரிமைத் தொகை. திட்டம் மாபெரும் வெற்றியடையவும் மேலும் விரிவுபடுத்தப்படவும் வாழ்த்துகிறேன். தமிழ்நாட்டு அரசுக்கு நன்றியும் அன்பும்.**

**ஸ்ரீதர் சுப்ரமணியம்**

நிவேதா எம்.முருகன் எம்.எல்.ஏ., முன்னிலை! மயிலாடுதுறை மாவட்டம் –

# செம்பனார்கோயிலில் தனியார் வேலைவாய்ப்பு முகாம்!

## அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் தொடங்கி வைத்தார்! எம்.பன்னீர்செல்வம் எம்.எல்.ஏ., பங்கேற்பு!

நாகை. செப்.20-

மயிலாடுதுறை மாவட்டம் செம்பனார்கோயில் கலைமகள் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் கலைஞர் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு மாவட்ட நிர்வாகம், வேலைவாய்ப்பு துறை சார்பில் தனியார் துறை வேலை வாய்ப்பு முகாம் நடைபெற்றது.

முகாமிற்கு மயிலாடுதுறை மாவட்ட ஆட்சித்தலைவர் ஏ.பி.மகாபாரதி தலைமை தாங்கினார். பூம்புகார் சட்ட மன்ற உறுப்பினர் நிவேதா எம்.முருகன் முன்னிலை வகித்தார்.

முகாமில் சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் சிவ.வீ. மெய்யநாதன் கலந்து கொண்டு தனியார் துறை வேலைவாய்ப்பு முகாமை தொடங்கி வைத்து நிறுவனங்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கி பேசுகையில் தமிழக முதல்வர் அவர்களின் தலைமையிலான திராவிட மாடல் அரசு வெற்றிக்கரமான பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.

மயிலாடுதுறை மாவட்டத்தை வளர்ச்சி பாதையில் அழைத்து செல்லும் விதமாக இம்முகாம் நடைபெறுகிறது. மயிலாடுதுறை மாவட்டம் முதல் 3 சிறந்த மாவட்டங்களில் ஒன்றாக திகழ்கிறது. கலைஞர் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு இந்த வேலை வாய்ப்பு முகாம் நடைபெறுகிறது. வேலை வாய்ப்பை உருவாக்கி தந்து பல வேலை வாய்ப்பற்ற இளைஞர்களுக்கு வேலை வழங்கும் விதமாக இம் முகாம் உள்ளது. இம்முகாம் நடைபெறும் கலைமகள் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் நிறைய மரங்கள் இருப்பது மிகவும் நன்மையான ஒன்று.

அதுபோல் மயிலாடுதுறை மாவட்டம் பசுமை மிகுந்த மாவட்டமாக மாற அதிக மரங்களை நட்டு நன்கு பராமரித்து மரங்களை உருவாக்க வேண்டும். பல்வேறு படித்த இளைஞர்கள் வேலைக்கு செல்லும போது எப்படி வேலைக்கு போக போகிறோம் என்ற எண்ணத்திலும் குறைவாக சம்பளம் என்ற எண்ணத்திலும் இளைஞர் வேலை தேடுவத்தில் மிகுந்த சிரம்மான சூழல் இருந்து வந்தது. ஆனால் தற்போது அந்நிலை மாறி அரசே முன் வந்து பல்வேறு படித்த வேலைவாய்ப் பற்ற இளைஞர்களுக்கு வேலை வழங்கிடும் விதமாக இந்த முகாம் நடைபெறுகிறது.

தாங்கள் இது போன்ற அரசின் பல்வேறு திட்டங்களை பயன்படுததி கொள்ள வேண்டும்.

அரசு மக்களுக்கான திட்டங்களை செயல்படுத்தி பொருளாதாரம் வேலை வாய்ப்பாப இருக்கட்டும். இதை தவிர பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி பொருளாதாரம் வேலை வாய்ப்பாக இருக்கட்டும. இதை தவிர பல்வேறு திட்டங்களை அரசு மக்களுக்காக நல்ல முறையில் செய்து வருகிறது. தாங்கள் இந்த வாய்பினை பயன்படுத்தி கொள்ள வேண்டும். இந்த வேலை வாய்ப்பு முகாமில் சென்னை, திருப்பூர், கோவை, திருச்சி, தஞ்சை மற்றும் மயிலாடுதுறை உள்ளிட்ட ஊர்களிலிருந்து வந்த தனியார் நிறுவனங்கள் மற்றும் திறன் பயிற்சி அளிக்கும் நிறுவனங்கள் கலந்து கொண்டுள்ளது.

இந்த முகாமில் 18 வயது முதல் 35 வயது வரை உள்ள 8ம் வகுப்பு முதல் 12ம் வகுப்பு வரை படித்தோர், டிப்ளமோ, ஐடிஐ, பட்டதாரிகள், நர்சிங் மற்றும் பி.ஈ. படித்த இளைஞர்கள், இளம் பெண்கள் என மொத்தம் 2949க்கும் மேற்பட்ட நபர்கள் கலந்து கொண்டனர்.

கலந்து கொண்டவர்களின் மாற்றுத்றனாளிகள் உட்பட 297 க்கும் மேப்ட்டவர்களுக்கு பணிநியமன ஆணை வழங்கப்ட்ட உள்ளது. 475 நபர்கள் இரண்டாம் கட்ட தேர்விற்கும் 137 நபர்கள் திறன் பயிற்சிக்கும் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். இவ்வாறு அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் பேசினார்.

விழாவில் சட்ட மன்ற உறுப்பினர்கள் சீர்காழி எம்.பன்னீர்செல்வம், மயிலாடுதுறை எஸ்.ராஜ்குமார், சட்ட மன்ற முன்னாள் உறுப்பினர் கி.சத்தியசீலன், மாநில விவசாய அணி இணைச் செயலாளர் ஆர். அருள்செல்வம், மாநில விவசாய தொழிலாளர் அணி துணைச் செயலாளர் ஜெக. வீரப்பாண்டியன், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் முத்துமகேந்திதரன், ஜி.என்.ரவி,

மாவட்டக் கழக அவைத் தலைவர் கே.ஜி.சீனிவாசன், துணைச் யெலளார்கள் மு.ஞானவேலன், எஸ்.செல்வமணி, தகவல் தொழில் நுட்ப அணி தஞ்சை மண்டல பொறுப்பாளர் பி.எம். ஸ்ரீதர், ஒன்றியக் கழகச் செயலாளர்கள் பி.எம்.அன்பழகன், எம்.அப்துல்மாலிக், அமுர்த.விஜயகுமார், என். இளையபெருமாள், ஞான. இமையநாதன், பி.முருகமணி, மூவலூர் எம்.மூர்த்தி, ஏ.ஜி.ஜெ.பிரபாகர், பஞ்சுகுமார், செல்லசேதுரவிக்குமார், மலர்விழிதிருமாவளவன், மங்கை எம்.சங்கர், ஏ.ஆர்.ராஜா,

நகரக் கழகச் செயலாளர்கள் குண்டாமணி (எ) என். செல்வராஜ், ம.சுப்பராயன், மாவட்ட ஊராட்சி தலைவர் உமாமகேஸ்வரிசங்கர், ஒன்றியக் குழு தலைவர்கள் வி.ஜெயகிரகாஷ், கே.மகேந்திதரன், நந்தினிஸ்ரீதர், காமாட்சி மூர்த்தி, சகுண சங்கரி மாவட்ட சார்பு அணி அமைப்பாளர்கள் சௌமியன், எம்.கே.மருது, பாலமுருகன், தீபாசத்தியேந்திரன், இரா.மனோகரன், காளி.சேதசப்பன், ஆர். எஸ்.ஸ்ரீதர் மற்றும் அரசு துறை அதிகாரிகள் உள்ளிட்ட ஏராளமானவர்கள் கலந்து கொணடனர்.

# நாமக்கல் கிழக்கு மாவட்டத்தில் பேரறிஞர் அண்ணா பிறந்த நாள்!

## கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் எம்.பி.,- அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன் பங்கேற்பு!

நாமக்கல், செப்.20-


தமிழ்மொழி உயர்வுக்காகவும், தமிழர்களின் மேம்பாட்டிற்காகவும், தமிழ் நாட்டின் சிறப்புக்காகவும், வாழ்நாள் முழுவதும் ஓயாது பாடுபட்ட உத்தமர் பேரறிஞர் பெருந்தகை அறிஞர் அண்ணா அவர்களின் 115வது பிறந்தநாளான செப்டம்பர் 15 ல் நாமக்கல் கிழக்கு மாவட்டத்தின் சார்பாக மோகனூர் சாலையில் அமைந்துள்ள பேரறிஞர் அண்ணா அவர்களின் திருவுருவ சிலைக்கு நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார், வனத்துறை அமைச்சர் டாக்டர்.மா.மதிவேந்தன், நாமக்கல் சட்டமன்ற தொகுதி உறுப்பினர்கள் பெ.இராமலிங்கம் ஆகியோர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

தொடர்ந்து ஏழை எளிய மக்களுக்கு பொங்கல் வழங்கி நலத்திட்ட உதவிகளை வழங்கினர்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட அவை தலைவர் சி மணிமாறன் தலைமை செயற்குழு உறுப்பினர் டாக்டர் மாயவன் மாநில நிர்வாகிகள் ராணி, நக்கீரன், நாமக்கல் கிழக்கு, மேற்கு, தெற்கு நகர செயலாளர்கள் செ.பூபதி, அ.சிவக்குமார், ராணா ஆர். ஆனந்த், நகர்மன்ற தலைவர் து.கலாநிதி, நாமக்கல் ஒன்றிய செயலாளர் வி. கே.பழனிவேல், நாம் மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் சி.விஸ்வநாத் மற்றும் மாவட்ட நிர்வாகிகள், இளைஞர் அணி நிர்வாகி கள், மகளிர் அணி நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள், வார்டு கழக செயலாளர்கள், நகர் மன்ற உறுப்பினர்கள், கிளை கழக செயலாளர்கள், கழக மூத்த முன்னோடிகள், கழக தொண்டர்கள் மற்றும் பொது மக்கள் பெரும் திரளாக கலந்து கொண்டனர்.



தருமபுரி மேற்கு மாவட்டம் பாப்பிரெட்டிப்பட்டி மேற்கு ஒன்றியம் கும்பாரள்ளி கிராமத்தில் மேற்கு மாவட்டக் கழக செயலாளர் முனைவர்.பி.பழனியப்பன் வழிகாட்டுதலின்படி,பாப்பிரெட்டிப்பட்டி மேற்கு ஒன்றிய கழக செயலாளர் பி.எஸ்.சரவணன் தலைமையில் பகுத்தறிவு பகவலன் தந்தை பெரியாரின் 145வது பிறந்த நாளை முன்னிட்டு அவரது திருஉருவப் படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தி,சமூக நீதி நாள் உறுதி மொழியேற்று,பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கப்பட்டது.இந்நிகழ்ச்சியில் ஊராட்சி மன்ற தலைவர் திருமலா தினேஷ்,கிளை செயலாளர் பெ.சுகந்திரம் மற்றும் கழகத்தினர் கலந்து கொண்டனர்.




திருச்சியில் உள்ள கழக முதன்மைச் செயலாளர் அலுவலகத்தில் மத்திய, மாவட்ட மகளிர் அணி மற்றும் மகளிர் தொண்டரணி அமைப்பாளர், துணை அமைப்பாளர் கூட்டத்தை கழக முதன்மைச் செயலாளர் கே.என்.நேரு தொடங்கி வைத்தார். நிகழ்ச்சியில் மத்திய மாவட்டச் செயலாளர் வைரமணி, மாநகர செயலாளர் அன்பழகன், கவுன்சிலர் காஜா மலை விஜி, சேர்மன் துரைராஜ், மாவட்ட துணைச் செயலாளர் விஜயா ஜெயராஜ், மாநகரத் துணைச் செயலாளர் கலைச்செல்வி ஜெகநாதன், கோட்டத் தலைவர்கள் விஜயலட்சுமி, கண்ணன், துர்கா தேவி மற்றும் மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் கவிதா, மாவட்ட தொண்டர் அணி அமைப்பாளர் மதனா, முன்னாள் கவுன்சிலர், கவிதா வாசுகி, விசாலாட்சி மகாலட்சுமி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.